DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 58/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : சோலைச்சாமி (P.w.24)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 8th day of May 2026

( எதிரி ஆஜர் ) .

**முதல் விசாரணை :–**

நான் தற்போது அருப்புக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் நடத்துநராக வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பத்தை 2013ம் வருடம் நானும், சடையாண்டி மற்றும் ராஜசேகர் ஆகியோர் பனையூர் அருகே விபத்து நடைபெற்ற இடத்தை பார்க்கச் சென்றிருந்தோம். திருச்சுழி போலிசார் விபத்து நடைபெற்ற இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், என்னுடன் வேலை பார்த்த ராஜசேகர் என்பவரும் கையொப்பம்

செய்தோம். மேற்படி ராஜசேகர் இறந்துவிட்டார். (**அந்த பார்வை மகஜர் அசாஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி :–**

1. நான் 13 வருடமாக வேலை பார்த்து வருகிறேன். ஒரு பேருந்து நின்று கொண்டிருக்கும்போது எதிரே வந்த லாரி சட்டென்று மோதினால் உள்ளே நிற்கும் நடத்துநர் வெளியே வந்து விழ வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். டிரைவர் இருக்கைக்கு அருகே நடந்துநர் நிற்கும்போது எதிரே நின்று கொண்டிருந்த லாரி மீது வந்து கொண்டிருந்த பேருந்து மோதினால் உள்ளே நிற்கும் நடத்துநர் வெளியே வந்து விழ வாய்ப்பு உள்ளதா என்றால் உள்ளது. விபத்து ஏற்பட்ட காலத்தில் அந்த ரோடானது ஒரு வாகனம் மட்டுமே செல்லக்கூடிய சாலை என்றால் சரிதான். ரோட்டிற்கு இருபுறமும் மண் ரோடு இருக்கும் என்றால் சரிதான். இரு வாகனங்களும் வேகமாக வந்து விலகுவதற்கு வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். நான் பார்க்கும்போது விபத்தில் சம்பந்தப்பட்ட லாரி வலது ஓரமாக டயர் உடைந்து விழுந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். நான் பார்க்கும்போது பொது மக்கள் யாரும் அங்கு இல்லை என்றால் வேடிக்கை பார்த்தவர்கள் இருந்தார்கள். விபத்து நடந்து எவ்வளவு நேரம் கழித்து சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் 1 மணி நேரம் கழித்து சென்றிருப்பேன்.

2. என்னிடம் போலிசார் எப்போது கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சம்பவம் நடந்த 1 மணிநேரத்தில் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் வாங்கினார்கள். மற்றொரு நபரும் என் முன்னிலையில் கையொப்பம் செய்தார். லாரி மண் ரோட்டில் தான் நின்று கொண்டிருந்ததா என்றால் இல்லை, ரோட்டில்தான் நின்று கொண்டிருந்தது. லாரியானது

மண் ரோட்டில் நின்று கொண்டிருந்தது என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொன்ன நாள் , நேரத்தில் பார்வை மகஜரில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.